


# இந்த வீடியோ-லே, உஷா ஜனோம் கேதரிங் ஃபுட்-ஐ பயன்படுத்தி, ஃபாஷனபிள் ஸ்டோல்- தைக்கறது பத்தி தெரிஞ்சுக்கலாம்.



நீங்க உங்க பழைய துப்பட்டா- அல்லது, ஸ்டோலை-ஐ, சுருக்கங்கள் சேர்க்கறது மூலமா, புது ஸ்டைல் ஸ்டேட்மென்ட்-ஆ, மாத்தலாம். கேதரிங் ஃபுட் -ஐ, எப்படி யூஸ்- பண்றதுன்னு தெரிஞ்சுக்கறதுக்கு,இதுவரைக்கும் நீங்க பார்க்கலேன்னா, எங்களுடைய கேதரிங் ஃபுட் டுடோரியல் வீடியோ-வை பாருங்க.ஆனா, உங்களுக்கு,அடிப்படை தையல் தெரியும்-னா,நீங்க,நேரடியாவே இதை தைக்க ஆரம்பிக்கலாம்.

உங்களுக்குத்தேவையானது, உஷா ஜனோம் கேதரிங் ஃபுட் , 140-க்கு, 15-அங்குல அளவுள்ள துணி, அல்லது, உங்ககிட்டே ஏற்கனவே இருக்கிற ஸ்டோல்-, நூல்,ஸ்கேல், மார்க்கர். நீங்க உங்க பழைய துப்பட்டா-வையும் நீளவாக்கிலே கட்- பண்ணி பயன்படுத்தலாம்,ஆனா, அப்படி பண்றீங்கன்னா, கட் பண்ண ஓரத்தை, நீங்க தைக்கணும். துணி ரொம்ப திக்-ஆ, அல்லது, கனமானதா, இருக்கக்கூடாது.

துணி, எப்படி, சிக் சாக்-ஆ, மடிக்கப்பட்டிருக்குன்னு, பாருங்க.இப்போ, மடிச்சிருக்கிற துணியிலே, முனையிலே இருந்து கடைசி வரைக்கும், 3- அங்குலத்துக்கு ஒரு புள்ளியை மார்க்- பண்றேன்னு, பாருங்க.

அடுத்து அடுத்து மடிப்புகளைப் பிரிச்சு,அதே, மாதிரி 3- அங்குல இடைவெளியிலே, ஒரு புள்ளியை மார்க்- பண்ணுங்க.

துணி முடியறவரைக்கும்,மடிப்புகளைப் பிரிச்சு, அதே மாதிரி புள்ளிகளை மார்க்- பண்ணுங்க.

இனி, துணியினுடைய நீளவாக்கிலே, ஸ்கேல்-னாலே இந்த மாதிரி, புள்ளிகளை, இணைச்சு நேர்க்கோடு போடுங்க,

மற்ற புள்ளிகளையும், இதே மாதிரி,பண்ணுங்க.

















மேலே இருந்து கீழே வரைக்கும், vertical-ஆ, நாலு கோடுகள் வர வரைக்கும், தொடர்ந்து செய்யுங்க.

இந்த கோடுகள் மேலே தான் கேதரிங் ஃபுட்-ஐ, வெச்சு தைக்கப் போறோம்.

முதல்லே, நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட்-ஐ, எடுத்துட்டு, கேதரிங் ஃபுட் -ஐ வைக்கணும்.

நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட் -ஐ, இந்தமாதிரி ஸ்க்ரூ-பண்ணுங்க. ப்ரெஸ்ஸர் -ஐ தூக்கி, ஃபுட்-ஐ, எடுத்திடுங்க.

கேதரிங் ஃபுட் -ஐ எடுத்து, ஸ்க்ரூ -ஓட அலைன்-பண்ணி, ப்ரெஸ்ஸர் -ஐ அழுத்தி,இறுக்கமா ஸ்க்ரூ -பண்ணுங்க.

இப்போ, துணியை எடுத்துக்கங்க.

இப்போ, மெஷின் செட்டிங்க்-ஐ, அட்ஜஸ்ட்-பண்ணுங்க.-ஐ, ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டரை A-லேயும்,, ஸ்டிச் லென்த்
ஐ, மாக்ஸிமத்திலேயும் , த்ரெட் டென்ஷனை-ஐ,5. -லேயும் -செட் பண்ணுங்க.

மார்க் பண்ண கோடு மேலே, கவனமா தைக்க ஆரம்பியுங்க. நீங்க தைக்கும் போது, லேசான சுருக்கங்கள் ஏற்படறதைப் பார்க்கலாம்.

கடைசி வரைக்கும் தையுங்க,ஊசியைத்தூக்கிட்டு, நூலை வெட்டிடுங்க.

இனி, அடுத்த லைன்-ஐ, தைக்க ஆரம்பியுங்க.

நாலு லைன்-கள்-லேயும், சுருக்கங்கள் உண்டாகற வரைக்கும்,மார்க் பண்ண கோடுகள் மேலே தையுங்க

வரிசையான அழகான சுருக்கங்கள் இருக்கிற உங்க stole- இப்போ, தயாராயிடுச்சு.வெறுமையா இருக்கிற ஓரங்கள்-லே, நூல் குஞ்சலங்களையோ, மணிகளையோ, கையாலே தைச்சு, இன்னும் கூட அழகுபடுத்தலாம்.

ஃபாஷன் அக்ஸஸரியா-யா இருக்கிற ஸ்டோல்-ஐ யாரும் பார்க்காம இருக்க மாட்டாங்க. உங்களுடைய லுக்-ஐ தனியா எடுத்துக்காட்டற பவர்- அதுக்கு இருக்கு .எந்த உடைக்கும் அது ஒரு ஃபினிஷிங் டச்- கொடுக்கும். இதை, ட்ரெஸ், கோட், ஸ்வெட்டர் ஜாக்கெட், சூட்-எது கூடவும் போடலாம்.